# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்
# க.பொ.த (உயர் தரம்) 2020
# தமிழ் (72) மாதிரி வினாத்தாள் பத்திரம் 11

ஆசிரியர் : திருமதி.த.பிரேமலா
பாடசாலை : யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

# வினாப்பத்திரம் 11
# புள்ளித்திட்டம்

பகுதி 1 இல் உள்ள மூன்று வினாக்களுக்கும்

1. இலக்கணம் : 20 1 20 புள்ளிகள்
2. அ) சுருக்கம் : 13 புள்ளிகள்
   ஆ) கிரகித்தல் : 12 புள்ளிகள்
3. கட்டுரை : 25 புள்ளிகள்

- பகுதி 11 இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக

  வினா 4 : 15 புள்ளிகள்
  வினா 5 : 15 புள்ளிகள்
  வினா 6 : 15 புள்ளிகள்
  வினா 7 : 15 புள்ளிகள்
  வினா 8 : 15 புள்ளிகள்

1. பின்வருவனவற்றுள் கடையண்ண வெடிப்பொலி எழுத்து

(1) ங் (2) க் (3) ச்

(4) ஞ் (5) வ் (..2..)

| | ஈரிதழ் ஒலி | உதட்டுப் பல் ஒலி | பல் ஒலி | நுனி அண்ண | வளை நா ஒலி | அண்ண ஒலி | கடையண்ண |
|---|---|---|---|---|---|---|---|
| வெடிப்பொலி | ப் | | த் | ற் | ட் | ச் | க் |
| மூக்கொலி | ம் | | ந் | ன் | ண் | ஞ் | ங் |
| மருங்கொலி | | | | ல் | ள்/ழ் | | |
| வருடொலி | | | | ர் | | | |
| ஆடொலி | | | | (ற) | | | |
| அரை உயிர் | | வ் | | | | ய் | |

- **வினா இல 2**

**டகரத்தின் மாற்றொலியாக அமைவது**

(1) வண்டு (2) படம் (3) குடம்

(4) மகுடம் (5) தடம் (...1.)

வண்டு - ண் + ட் + உ

படம் - ப் + அ + ட் + அ

குடம் - க் + உ + ட் + அ

மகுடம் - க் + உ + ட் + அ

தடம் - த் + அ + ட் + அ

- **வினா இல 3**
- **பிறர் என்ற சொல்லின் பகுதியாக அமைவது**

(1) பி (2) ற (3) பிற

(4) பிறர் (5) ர் **(....3....)**

---

**குறிப்பு**

| | |
|---|---|
| முன்னோர் | முன் + ஓர் |
| பின்னோர் | பின் + ஓர் |
| நல்லோர் | நல் + ஓர் |
| பிறர் | பிற + ர் |

வினா இல 4

- **பொருளைக் கொண்டிராத பகுபத உறுப்புக்கள்**

(1) சாரியை, விகுதி (2) சாரியை, சந்தி

(3) சாரியை, பகுதி (4) விகுதி, பகுதி

(5) சந்தி, பகுதி (..2...)

- பகுதி - பெயர் / வினை காட்டும்
- விகுதி - திணை, பால், எண், இடம், காலம் காட்டும்
- இடைநிலை - காலம் காட்டும் (பெயரிடைநிலை தவிர)

## வினா இல 5

- உயர்திணை வினாப்பெயராக **அமையாதது**

(1) யாரோ (2) எவரோ (3) எவையோ

(4) எவனோ (5) எவர்களோ (....3....)

---

- உயர்திணை - அஃறிணை வினாப் பெயர்கள்

| உயர் திணை | அஃறிணை |
| --- | --- |
| யாரோ | என்னவோ |
| எவனோ | எதுவோ |
| எவளோ | எவையோ |
| எவரோ | எத்தனையோ |
| எவர்களோ | எவ்வளவோ |

**வினா இல 6**

பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமைவது

(1) நடந்தது (2) நடத்தல் (3) நடை

(4) நடக்காமை (5) நடந்தவன் **(..3....)**

- **ஆக்கப்பெயர் மூன்று வகைப்படும்**

| பெயர் + விகுதி | வினை + விகுதி | பெயர் + விகுதி + விகுதி |
|---|---|---|
| 1. பெண் + இயம் | 1. கல் + வி | 1. பெண் + இயம் + துவம் |
| 2. கடை + காரன் | 2. முயல் + ச்சி | 2. முதல் + ஆளி + துவம் |
| 3. முதல் + ஆளி | 3. காண் + சி | |

## வினா இல 7

- **அவை போயின என்பதன் இலக்கண விளக்கம்**

(1) படர்க்கை ஆண்பால்

(2) படர்க்கை பலர்பால்

(3) படர்க்கை பலவின்பால்

(4) படர்க்கை ஒன்றன்பால்

(5) படர்க்கை மரியாதை **(...3...)**

- **வினா இல 8**

# தம்பி உழைப்பால் உயர்ந்தவன் இங்கு **ஆல் உருபு** உணர்த்தும் பொருள்

(1) கருவி (2) கருத்தா (3) உடனிகழ்ச்சி

(4) காரணம் (5) இடம் **(...4....)**

- வினா இல 9

**பின்வருவனவற்றுள் பொது வினையாக அமைவது**

(1) எரி, நனை (2) நட, வா (3) அழு, சிரி

(4) படி, எழுது (5) ஓடு, நட **(...1....)**

- **பொதுவினை என்பது**

**செயற்படு பொருள் குன்றிய வினையாகவும் செயற்படுபொருள் குன்றாத வினையாகவும் அமையும்**

- **வினா இல 10**

**பின்வருவனவற்றுள் ‘வை’ துணை வினையாக அமைந்த வாக்கியம்**

(1) புத்தகத்தை மேசையில் வைத்தேன்

(2) அம்மா பொட்டு வைத்தாள்

(3) எனக்கு சாப்பாடு எடுத்து வை

(4) இரண்டு பேனை வைத்திருக்கிறேன்

(5) அப்பா பணம் வைத்திருந்தார்

**(....3.....)**

**வினா இல 11**

**தனி வினையடையாக அமைவது**

(1) வேகமாக (2) தந்திரமாக

(3) இனிமையாக (4) இளமையாக

(5) அடிக்கடி **(...5.....)**

பெயர்ச்சொற்களுடன் **ஆக, ஆய்** ஆகிய வினையடை விகுதிகளை இணைத்து உருவாக்கப்படுவது கூட்டு வினையடை எனப்படும்

**வினா இல 12**

**செய்து எச்சத் தொடர் கொண்ட வாக்கியம்**

(1) பாடசாலைக்கு வர எனக்கு சுதந்திரம் உண்டு
(2) நான் கேட்டுத் தெரிந்து கொள்வேன்
(3) நீங்கள் வந்தால் பணம் தருவேன்
(4) நான் வந்தால் நீ பாட வேண்டும்
(5) நான் வர நீ போவாய் (..2..)

வினா இல 13

## இங்கு இடம்பெற்ற நெடில் தொடர் குற்றியலுகரப் புணர்ச்சி

(1) எ.்.கை (2) விறகை (3) நாக்கை

(4) மார்பை (5) காசை **(...5...)**

**வினா இல 14**

**எதிர்காலப் பெயரெச்சமாக அமைவது**

(1) வந்த (2) வருகின்ற (3) வரும்

(4) வந்து (5) வருகிற **(....3...)**

**வினா இல 15**

# குறிப்பு வினைப் பெயராக அமையாதது

(1) குழையன் (2) நல்லன் (3) பெரியன்

(4) கரியன் (5) யான் **(..5....)**

**வினா இல 16**

**சொல்லின் இடையில் மூன்று மெய்கள் மயங்கி வருவது**

(1) தேர்ச்சி (2) கீழ்மை (3) இஞ்சி

(4) கற்பு (5) அன்பு **(..1....)**

தே + ர் + ச் + ச் + இ

**வினா இல 17**

**கருங்குழல் பாடினாள் என்பது**

(1) வேற்றுமைத்தொகை (2) வினைத்தொகை

(3) உம்மைத்தொகை (4) உவமைத்தொகை

(5) அன்மொழித்தொகை **(..5....)**

**வினா இல 18**

**இடைச்சொல்லும் வினைச்சொல்லும் இணைந்து உருவாகும் கூட்டு வினையாக அமைவது**

(1) காத்திரு (2) தட்டிக்கேள் (3) முன்னேறு
(4) சீரழி (5) கைப்பிடி **(..3..)**

**வினா இல 19**

**இறந்த காலம் காட்டும் வினைச்சொல் விகுதிகள்**

(1) டு, டும் (2) கு, கும் (3)து, கும்
(4) று, கும் (5) றும், கு **(..1...)**

து, தும், று, றும் - இறந்த காலம் எதிர் காலம்
கு, கும் எதிர் காலம்
டு, டும் இறந்த காலம்
உண்டு, (உண்டேன்) உண்டும்(உண்டோம்)

**வினா இல 20**

**தெலுங்கு மொழிச் சொல்லாக அமைவது**

(1) இராணுவம் (2) அண்டா (3) துப்பாக்கி

(4) கன்னல் (5) தகவல் **(..1...)**

- 2. அ. பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக

- விஞ்ஞான நோக்கும் அறிவும் மனிதனுடைய கற்பனையின் விளைவல்ல. வாழ்க்கைத் தேவைகள் ,அவசியப் பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுவன அவை. மனிதன் படைக்கும் கருவிகளைத் துணையாகக் கொண்டு மனிதன் கண்டுபிடிப்பனவே விஞ்ஞான உண்மைகள். கிறித்து அப்தத்திற்கு எழுநூறு வருடங்களுக்கு முன்னரளவில் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கள் ,இரும்பின் பண்பையும் பயனையும் அறியத்தொடங்கினர். அதன் பின்னரே அவர்கள் முழு நாகரிக வளர்ச்சியுறத் தொடங்கினர் என்று வரலாற்றாசிரியர் கூறுவர். இக்காலப்பகுதியை 'இரும்புக் காலம்' எனவும் பெயரிட்டழைப்பர். அக்காலத்திலே வாழ்ந்த மக்கள் பிரேதங்களை அடக்கம் செய்வதற்குப் பல முறைகளைக் கையாண்டனர். அவற்றில் ஒன்றுதான் பெருங்கல் சவ அடக்கமுறை எனப்படுவது. நிலத்தை அகழ்ந்து சவத்தை வைத்துச் சுற்றிவரச் சவப்பெட்டிபோலப் பெருங்கற்களை அடுக்கி வைப்பதே இவ்வடக்கமுறையின் பிரதான அம்சமாகும். ஈமக்கிரியைகளின் ஒரு பகுதியாகச் சவக்குழிக்குள் பலவிதமான மட்பாண்டங்களை வைப்பர்.புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாக தொல்பொருள் ஆய்வாளர் இத்தகைய மட்பாண்டங்கள் பலவற்றை ஆராய்ந்துள்ளனர். கருமை நிறமும் செம்மை நிறமும் அமைந்த மட்பாண்டங்களைச் செய்த அம்மக்களுக்கு ஓரளவு இரசாயன அறிவு இருந்திருத்தல் அவசியம். மண்ணைப் பல்வேறு வெப்ப நிலைகளில் சுடும் போது, அது கறுப்பாகவும் சிவப்பாகவும் நிறவேறுபாடடைகின்றது என்பர்இ மண்ணுடன் அப்பிரகம் முதலிய வேறு பொருட்களையும் கலத்தல் வேண்டும். பாண்டத்தை வனைவதற்கு சக்கரம் வேண்டும். மட்பாண்டக் கலை வளர்ச்சியுடன் பண்டைய இரசாயனமும் பௌதிகமும் தோற்ற நிலையில் அரும்பத்தொடங்கி விட்டன. இத்தகைய சூழலிலேயே இரும்பும் வழக்கிற்கு வந்தது. நாகரிக வளர்ச்சியின் முதற்படியினை தமிழ் மக்களும் உலகத்தின் பிற பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் போல விஞ்ஞான அறிவின் துணை கொண்டே கடந்தனர்.

(13 புள்ளிகள்)

- விஞ்ஞான நோக்கும் அறிவும் மனிதனுடைய கற்பனையின் விளைவல்ல. வாழ்க்கைத் தேவைகள் ,அவசியப் பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுவன அவை. மனிதன் படைக்கும் கருவிகளைத் துணையாகக் கொண்டு மனிதன் கண்டுபிடிப்பனவே விஞ்ஞான உண்மைகள்.

- கிறித்து அப்தத்திற்கு எழுநூறு வருடங்களுக்கு முன்னரளவில் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கள் ,இரும்பின் பண்பையும் பயனையும் அறியத்தொடங்கினர். அதன் பின்னரே அவர்கள் முழு நாகரிக வளர்ச்சியுறத் தொடங்கினர் என்று வரலாற்றாசிரியர் கூறுவர்.

- இக்காலப்பகுதியை ‘இரும்புக் காலம்’ எனவும் பெயரிட்டழைப்பர். அக்காலத்திலே வாழ்ந்த மக்கள் பிரேதங்களை அடக்கம் செய்வதற்குப் பல முறைகளைக் கையாண்டனர்.

- அவற்றில் ஒன்றுதான் பெருங்கல் சவ அடக்கமுறை எனப்படுவது. நிலத்தை அகழ்ந்து சவத்தை வைத்துச் சுற்றிவரச் சவப்பெட்டிபோலப் பெருங்கற்களை அடுக்கி வைப்பதே இவ்வடக்கமுறையின் பிரதான அம்சமாகும்.

- ஈமக்கிரியைகளின் ஒரு பகுதியாகச் சவக்குழிக்குள் பலவிதமான மட்பாண்டங்களை வைப்பர்.புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாக தொல்பொருள் ஆய்வாளர் இத்தகைய மட்பாண்டங்கள் பலவற்றை ஆராய்ந்துள்ளனர்.

- கருமை நிறமும் செம்மை நிறமும் அமைந்த மட்பாண்டங்களைச் செய்த அம்மக்களுக்கு ஓரளவு இரசாயன அறிவு இருந்திருத்தல் அவசியம். மண்ணைப் பல்வேறு வெப்ப நிலைகளில் சுடும் போது, அது கறுப்பாகவும் சிவப்பாகவும் நிறவேறுபாடடைகின்றது என்பர் மண்ணுடன் அப்பிரகம் முதலிய வேறு பொருட்களையும் கலத்தல் வேண்டும். பாண்டத்தை வனைவதற்கு சக்கரம் வேண்டும். மட்பாண்டக் கலை வளர்ச்சியுடன் பண்டைய இரசாயனமும் பௌதிகமும் தோற்ற நிலையில் அரும்பத்தொடங்கி விட்டன.

- இத்தகைய சூழலிலேயே இரும்பும் வழக்கிற்கு வந்தது. நாகரிக வளர்ச்சியின் முதற்படியினை தமிழ் மக்களும் உலகத்தின் பிற பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் போல விஞ்ஞான அறிவின் துணை கொண்டே கடந்தனர்.

# சுருக்கம் புள்ளித்திட்டம் (08 + 05 = 13)

- 45 - 55 சொற்கள் முழுப்புள்ளிக்கும் நோக்கப்படும்
- 35 – 45 ------ 55 – 65 02 புள்ளிகள் குறைவு
- 30 - 35 ------- 65 – 75 03 புள்ளிகள் குறைவு
- 30 க்கு குறைவாகவும் 70 க்கு கூடவாகவும் புள்ளிகள் இல்லை

இவ்வாறு நோக்கப்படுகின்றது

- **மனிதனுடைய அவசியமான தேவையின் அடிப்படையில் பிறந்ததே விஞ்ஞானம்**
- **அவனால் கண்டு பிடிக்கப்பட்டவையே விஞ்ஞான உண்மைகள்**
- **தென்னிந்தியாவில் பல நூறு ஆண்டுகளாக இரும்பு பயன்பாட்டில் இருந்தது**
- **நாகரிக வளர்ச்சியின் மற்றொரு வெளிப்பாடு பெருங்கல் சவ அடக்கு முறை ஆகும்**
- **சவக்குழிகள் புதைக்கப்பட்ட மட்பாண்டங்களை ஆய்வு செய்தனர்**
- **மட்பாண்டக் கலை வளர்ச்சி மக்களின் விஞ்ஞான அறிவின்ஆரம்பத்தை காட்டுகிறது**
- **தமிழ் மக்களின்** நாகரிக வளர்ச்சிக்கு விஞ்ஞான அறிவு **துணை செய்துள்ளது**

1. முற்போக்கு இலக்கியக் கோட்பாடு இலக்கியத்தில் வளர்த்தெடுத்த 2 எண்ணக் கருக்களை தருக

தேசிய இலக்கியக் கோட்பாடு
யதார்த்தவாதம்

2. இலங்கைத் தமிழ் இலக்கியம் எதற்காகப் போராடியது ?

இலங்கைத் தமிழ் இலக்கியம் இந்திய வணிக இலக்கியத்தின் வழி சென்று விடக் கூடாது என்பதற்காகவும் முதல் நிலைப்படுத்தி பேசவேண்டும் என்பதற்காகவும் போராடியது

3. சமூகப் பிரச்சினை இலக்கியப் பொருளாக அமைய காரணமான அணுகுமுறை யாது ?

யதார்த்தவாதம்

4. மரபு பற்றிய விவாதம் ஏற்பட காரணம் யாது?

சலுகைகள் மறுக்கப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகளை எழுதத் தொடங்கியமை
சமத்துவக் கருத்துக்கள் வற்பறுத்தப் பட்டமை

5. நவீன எழுத்தாளர் நவீன எழுத்துக்கள் நிராகரிக்கப்படக் காரணம் யாது ?

பாரம்பரிய மரபுபற்றிய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமை

6 யதார்த்தவாதம் என்ற தொடரை விளக்குக

உள்ளதை உள்ளவாறே கூறுதல்

புள்ளிகள் (6 x 2) 12

- **கட்டுரை புள்ளித்திட்டம்- மொத்தம் 25 புள்ளிகள்**

| | |
|---|---|
| பொருள் | 12 புள்ளிகள் |
| மொழிநடை | 08 புள்ளிகள் |
| அமைப்பு | 05 புள்ளிகள் |

# உலகை அச்சுறுத்தும் கொரோனா தொற்று

- உலகை முடக்கியது உலகுக்கு சவாலான விடயம்
- தொற்றுநோய் தொடர்பான விளக்கம்
- கொரோனா தொற்றின் தோற்றமும் பரவலாக்கமும்
- இதன் விளைவுகள்
- இதனை எதிர்கொள்ளும் முறைமைகள்
- நாடுகள் கடைப்பிடிக்கும் சட்டதிட்டங்கள்
- மக்களின் உடல் உள ஆரோக்கியம்
- மீண்டு எழுவதற்கான முயற்சிகள்

# இலங்கையில் சுற்றுலா மையங்கள்

- வருமானம் பெற்றுத்தரும் துறையாக சுற்றுலாத்துறை விளங்கல்
- இலங்கையின் அமைவிடமும் தொன்மையும்
- இலங்கையில் உள்ள சுற்றுலா மையங்கள்
- சுற்றுலா மையங்களின் சிறப்புக்கள்
- சுற்றுலா மையங்களால் கிடைக்கும் நன்மை தீமைகள்
- இதன் விருத்தி தொடர்பான அரசின் செயற்பாடுகள்
- சுற்றுலா மையங்கள் பாதுகாக்கப் பட வேண்டியதன் அவசியம்

## ஊடகங்களில் விழிப்புணர்வு

- ஊடகம் என்பதன் விளக்கம்
- ஊடகத்தின் வகைகள்
- ஊடகங்களும் மக்களும்
- விழிப்புணர்வு வழங்கப்படும் துறைகள்
- அரசியல் கல்வி சுகாதாரம் போக்குவரத்து நோய்த்தொற்று காலநிலை
- இதற்காக ஊடகங்ாள் கையாளும் உத்திகள்
- இதன் விருத்தி தொடர்பாக அரசு தனியாரின் செயற்பாடுகள்

## இலக்கியங்களில் மருத்துவக் குறிப்புக்கள்

- இலக்கியத் தோற்றமும் மக்கள் வாழ்வும்
- இலக்கியம் தொடர்பான நோக்கு
- இலக்கிய வகைப்பாடுகள்
- தமிழ் இலக்கியத்தில் மருத்துவக் குறிப்புக்கள்
- ஏலாதி திரிகடுகம் சிறுபஞ்சமூலம்
- ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் மருத்துவக் குறிப்புக்கள்
- சோதிட நூல்கள் வைத்திய நூல்கள்
- நவீன இலக்கியங்களில் மருத்துவக் குறிப்புக்கள்
- நாவல் சிறுகதை

# மனிதம் பேணுவோம்

- உயிரின வகைப்பாட்டில் மனிதன்
- நாகரிகத் தோற்றமும் மனிதப் பண்பும்
- இலக்கியங்களில் மனிதப் பண்புகள்
- உயிர் இரக்கம், பணிவு, பொறுமை, ஈகை, விருந்தோம்பல், தன்நலம் கருதாமை, சுற்றம் காத்தல் முதலியன
- மனிதம் பேணியோரை சான்று காட்டல்
- மனிதத்துவமும் நீதிநூல்களும்
- மனிதம் பேணுவதன் சிறப்புக்கள்
- சமகாலத்தில் மனிதத்துவம்

- **வினா இல 4**

**சங்க காலத்தில் தோற்றம் பெற்ற புறப்பொருள் நூல்களை வகைப்படுத்துக**

| எட்டுத்தொகை | பத்துப்பாட்டு |
|---|---|
| புறநானூறு | திருமுருகாற்றுப்படை |
| பதிற்றுப்பத்து | பொருநராற்றுப்படை |
| பரிபாடல் | சிறுபாணாற்றுப்படை |
| | பெரும்பாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |
| | மதுரைக்காஞ்சி |
| | நெடுநல்வாடை |

- **பரிபாடல்** அகத்திணை புறத்திணை
- **நெடுநல்வாடை** அகமா புறமா என்ற சர்ச்சைக்குரிய நூல்

ஆ)

**சங்க இலக்கியப் பண்பான ‘பெயர்சுட்டா காதல் பாடல்’ தொடர்பாக விளக்குக**

- சங்க இலக்கிய அகத்திணை மரபு
- அகம் சார்ந்த விடயங்களுக்கு பெயர் சுட்டுவதை அக்காலப் புலவர்கள் நாகரிகமாக கருதவில்லை
- தலைவன் தலைவி போன்றோரின் பெயர்கள் சுட்டப்படாமை தனிச்சிறப்பாகும்
- தலைவன் தலைவி போன்றோரின் பாத்திரக் கூற்றுக்களாக அகப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன
- பெயர் குறிப்பாக குறிப்பிடப் பட்டாலும் புறத்திணையாகக் கொள்ளும் மரபு காணப்பட்டது
- புற இலக்கியங்கள் பெயர் சுட்டிப் பாடப்பட்டன

**இ)**

**மன்னர்-புலவர் தொடர்பினை நான்கு சான்றுகளைக் குறிப்பிட்டு விளக்குக**

- அதியமான் - ஔவையார்
- பாரி - கபிலர்
- கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையர்
- குமணமன்னன் - பெருந்தலைச்சாத்தனார்

## சோழர் காலத்தில்

## அ) காவியங்களின் தோற்றத்திற்கான பின்னணிச்சூழல்

- சோழர் காலத்தின் அரசியல் ரீதியான ஸ்திரப்பாடு
- ஆட்சிச்சிறப்பு,பொருளாதார வலு, இவற்றால் மக்களின் அமைதியான வாழ்வு
- உலகியல் - ஆன்மீகத்துக்கு இடையில் முரண்பாடு அற்ற தன்மை
- மன்னர்கள் புலவர்களை ஆதரித்தமை
- வடமொழிக்கல்வி ஓங்கியமை
- இலக்கண நூல்களின் தோற்றம்
- தண்டியலங்காரம்

ஆ)

**சோழர்கால காவியப் பண்புகள்**

- காவிய இலக்கணங்கள் யாவும் பொருந்தி இருந்தமை
- பெருங்காப்பியம்,சிறுகாப்பியம் என வகைப்படுத்தத் தக்கதாக காவியத்தோற்றம் அமைந்தமை
- நால்வகைப் பொருள்( அறம்,பொருள்,இன்பம்,வீடு) குறிப்பிடப்படல்
- தன்னிகரில்லா தலைவன் வியந்து சிறப்பிக்கப்படல்
- நாடு,நகர வர்ணனைகள் குறிப்பிடப்படல்
- அகத்திணை,புறத்திணை விரவிக் காணப்படல்
- சமயச்சார்புடையதாக காணப்படல்
- சீவகசிந்தாமணி சமணம்
- குண்டலகேசி பௌத்தம்
- வடமொழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை
- விருத்தப்பா முதன்மை பெற்றமை
- காண்டம்,படலம் என்றவாறான பிரிப்பு காணப்பட்டமை

# பரணி இலக்கியத்தின் அமைப்பு

சோழர் காலத்தில் தோற்றம் பெற்ற சிற்றிலக்கியங்களில் ஒன்று
96 வகையான பிரபந்தங்களில் ஒன்று
கலிங்கத்துப்பரணி சயங்கொண்டார்
தக்கயாகப்பரணி ஒட்டக்கூத்தர்
போர் வெற்றி கண்ட தன்னிகரில்லா மன்னன் மேல் பாடப்படுவது
ஆனையாயிரம் அமரிடை வென்ற மன்னவன் தனக்கு வகுப்பது பரணி
பன்னிருபாட்டியல்
தோற்றவர் பெயரில் பரணி பாடப்படல்
அரசவை இலக்கியமாக காணப்பட்டமை

| | |
|---|---|
| கடவுள்வாழ்த்து | இராச பாரம்பரியம் |
| கடைதிறப்பு | பேய்முறைப்பாடு |
| காடு பாடியது | அவதாரம் |
| கோயில் பாடியது | காளிக்கு கூளி கூறியத |
| தேவியைப் பாடியது | போர்பாடியது |
| பேய் பாடியது | களம் பாடியது |
| இந்திரசாலம | கூழ் அடுதல் |

## கலிங்கத்துப்பரணி

- தமிழில் தோன்றிய முதல் பரணி
- சயங்கொண்டார் பாடியது(அரசவைப்புலவர்)
- கலிங்க மன்னன் ஆனந்த பத்மன் மீது குலோத்துங்க சோழ மன்னனின் படைத்தலைவனாகிய கருணாகரன் போர் தொடுத்து பெற்ற வெற்றியை பாராட்டி தோல்வியுற்ற கலிங்க நாட்டின் பெயரால் எழுதப்பட்டது
- 599 தாழிசைகளைக் கொண்டது
- பேய்கள் பரணி நாளில் கூழ் சமைத்து உண்டு மகிழ்ந்து போர்க்களத் தலைவனை வாழ்த்துவதாக அமைந்துள்ளது
- காளியும் கூலிப் பேய்களும் பாத்திரங்களாக அமைதல்

## தக்கயாகப்பரணி

- பாடியவர் ஒட்டக்கூத்தர்
- தக்கன் செய்த வேள்வியை அழித்த போது அப்போர்க்கள நிலையைச் சிவபெருமானே உமை அம்மைக்கு காட்டுவதாக அமைதல்
- வீரபத்திரர் தன் தலைவன் சிவபெருமானின் ஆணைப்படி தக்கனையும் உடனிருந்த தேவர்களையும் எதிர்த்துப் போரிட்டு பெற்ற வெற்றியை கூறுகின்றது.
- போரில் தோல்வியுற்ற தக்கனின் பெயரால் தக்கயாகப் பரணி பெயர்பெற்றது

## ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த சைவசமயச் சார்பான இலக்கியங்கள் குறித்து விபரிக்குக

- **தட்சண கைலாய புராணம்**
- இந்நூல் திருகோணமலையில் கோயில் கொண்டிருக்கும் கோணேசப் பெருமானினதும் மாதுமையாளினதும் பெருமைகளைக் கூறுகின்றது.
- கோணேசர் கோயில் பற்றிய தலபுராணமாக இந்நூல் அமைகிறது.
- கோயிலின் தோற்றம் ஆதிவரலாறு என்பனவற்றைக் கூறுகின்றது.
- சமய உணர்வையும் மன்னர்களினது சமயப் பணியையும் எடுத்துரைக்கின்றது
- இதனை கைலாச புராணம் எனவும் கூறுவர்
- ஆட்சியை ஸ்திரப்படுத்த மன்னர்கள் சமயத்தை ஊடகமாகப் பயன்படுத்தினார்கள் என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது
- ஆரியச்சக்கரவர்த்திகள் தமது ஆட்சியை சைவசமயச் சூழலில் செலுத்தினார்கள் என்பதை
- இந்நூல் வெளிப்படுத்துகின்றது
- 7சருக்கங்களையும் விருத்தப்பாவையும் கொண்டது

- **திருக்கரசைப் புராணம்**
- திருகோணமலைக்கு அருகில் மகாவலி கங்கை கரையில் கரசை எனும் இடத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவனைப் போற்றுகின்றது
- நான்கு சருக்கங்கள் காணப்படுகின்றன(இலங்கைச் சருக்கம்,கங்கைச் சருக்கம்,தாபனச் சருக்கம்,பூசைச் சருக்கம்)
- பாடிய புலவர் பெயர் அறியுமாறில்லை
- கரைசையம் பதியை அகத்தியத் தாபனம் எனவும் அகத்திய முனிவரே இதனை ஸ்தாபித்தார் என்றும் கூறப்படுகிறது
- வடமொழிப் புராணத்தை தழுவிச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது

- பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் குறித்து விபரிக்குக

கதிரமலைப் பள்ளு

ஈழத்தின் பள்ளுப் பிரபந்தங்களுள்
காலத்தால் முந்தியது
விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு
சமூகத்தினரிடையே ஒரு காலத்தில்
முக்கியத்துவம் பெற்ற இலக்கிய வடிவமாக
இது விளங்குகின்றது
நாடகத்தன்மை வாய்ந்ததாகும் நாடகமாக
ஆடப்பட்டது
கனதியான கருத்தாழம் மிக்க செய்யுள்கள்
காணப்படல்
கதிர்காம முருகனை பாட்டுடைத்
தலைவனாகக் கொண்டு பள்ளுஇலக்கிய
மரபுக் கேற்ப
பள்ளன்,மூத்தபள்ளி,இளையபள்ளி,பண்ணைக்
காரன் ஆகிய பாத்திரங்களைக் கொண்டு
காணப்படுகிறது
இயற்றியவர் பெயர் அறியப்படவில்லை
இந்நூலின் கடவுள் வாழ்த்தில்

கண்ணகி வழக்குரை
கோவலன் கண்ணகி கதையை எடுத்துக்
கூறும் இலக்கியம் இதுவாகும்
மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை
யாழ்ப்பாணத்தில் கோவலன் கதை
முல்லைத்தீவில் சிலம்பு கூறல் என்று
அழைக்கப்படுகின்றது
இது சாதாரண பொதுமக்களை பாட்டடைத்
தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளது
இது நாட்டுக் கூத்து மரபில்
காணப்படுகின்றது
சக்கரவர்த்திகளில் ஒருவரான
சயவீரசிங்கையாரியன் எனப்படும் சகவீரனால்
பாடப்பட்டது
யாழ்ப்பாணப் பேச்சு வழக்குச் சொற்கள
கையாளப்பட்டுள்ளமை
ஓசை மரபு, பண்பாட்டுக் கூறுகள் (சகுனம் ,
சாத்திரம் , நம்பிக்கைகள் , சடங்குகள்)
பழமொழிகள் கையாளப்பட்டுள்ளமை
நாட்டார் இலக்கியச் செல்வாக்கு செறிந்த

- நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (1716  1780)
- யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர்
-
- ஒல்லாந்தர்  அரசினால் தேசவழமை நூலை திருத்தி அமைக்க பணிக்கப்பட்ட அறிஞர் வில்வராய முதலியாரின் மைந்தன்
- இவரது இயற்பெயர் செயதுங்க மாப்பாண முதலி
- இயற்றிய பிரபந்தங்கள்
-  கல்வளை அந்தாதி
- மறைசை அந்தாதி
- கரவை வேலன் கோவை
- பறாளை விநாயகர் பள்ளு
- சிற்றிலக்கியங்களை கட்டளைக் கலித்துறை ,யமகம் கொன்ற யாப்பினையும் சொல்லணியையும் பயன்படுத்தியமை அவரது புலமைக்கு சான்றாகும்
-
- வில்வராய முதலியாரின் வீட்டுக்கு வழிகேட்ட போது பாடல் மூலமே வழிகாட்டியவர்
-  பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்....

- நீலாவணன் (31.06.1931 11.01.1975)
- கிழக்கு மாகாணம் பெரிய நீலாவணை பிறப்பு
- சித்த வைத்தியர் கேசப்பிள்ளை தங்கம்மா சிரேஸ்ட புதல்வன்
- பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்
- பிராயச்சித்தம் சிறுகதை மூலம் எழுத்துலகில் பிரவேசித்து பின்னர் கவிதை எழுதத் தொடங்கினார்
- ஈழத்துக் கவிதை முன்னோடிகளில் ஒருவராக விளங்கினார்
- முதற்கவிதை ஓடிவருவதென்னேரமோ
- இறுதிக்கவிதை பொய்மை பொசுங்கிற்று
- கவிதை,உருவகக்கதை,கட்டுரை,சிறுகதை,கவிதை நாடகம் என தனது ஆளுமையை வெளிப்படுத்தினார்
- இவரது கவிதைச் சிறப்பு ஓசைநயம்
- துள்ளும் சந்தம், மனதுக்கு இன்பம் தரும் தாளம்,நகைச்சுவை,மனித நேயம்
- சந்தக் கவிதைக்கு நீலாவணன் என சிறப்பிக்கப் படுகின்றார்
- மழைக்கை முதன்முதல் மேடை ஏறிய பா நாடகம்
- கவிதைத் தொகுப்பு வழி ஓத்திகை
- காவியம் வேளாண்மை (மட்டக்களப்பு வாழ்வியலின் படப்பிடிப்பு)
- கவிதை அரங்கு,விமர்சன அரங்கு,நூல் அறிமுகம்,எழுத்தாளர் சந்திப்பு என இவரது செயற்பாடுகள் விரிவு பெற்றன
- எழுத்தாறர் பலரை உருவாக்கினார் (அனமபு முகைதீன்,மருதூர்க் கொத்தன்)

**இலங்கையர்கோன் (06.091915 14.10.1961)**

- தமிழ்ச் சிறுகதை முண்ணோடிகளில் ஒருவர்
- இவரது இயற்பெயர் சிவஞானசுந்தரம்
- இவர் யாழ்ப்பாணம் ஏழாலையை பிறப்பிடமாகக் கொண்டவர்
- இவர் சமஸ்கிருதம் ,ஆங்கிலம் ,இலத்தீன் ,தமிழ் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார்
- சட்டக்கல்லூரி வழக்கறிஞர் நிர்வாக சேவை காரியாதிகாரியாகவும் செயற்பட்டார்
- இவர் ‘18’வயதில் எழுதத் தொடங்கினார்
- முதற் கதை ‘மரிய மதலேனா’ (1838 கலைமகள் இதழில் வெளியானது)
- கடற்கோட்டை,சிகிரியா,அனுலா,மணப்பரிசு,யாழ்பாடி,மேனகை முதலிய கதைகளை எழுதினார்
- தமிழக இதழ்களிலும் கதைகள் எழுதினார்(கிராம ஊழியன்,சூறாவளி,பாரத தேவி)
- 30 க்கும் மேற்பட்ட கதைகளை எழுதினார்
- வெள்ளிப் பாதசரம் சிறுகதைத் தொகுப்பு
- மாதவி மடந்தை மேடை நாடகம்
- மிஸ்டர் குகதாசன் நகைச்சுவை நாடகம்
- விதானையார் வீட்டில் ,லய்டன் கந்தையா நாடகம்
- முதற்காதல் மொழிபெயர்ப்பு நாவல்

**புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை**

- மட்டக்களப்பு மண்டூரில் பிறந்தார்(1899)
- ஏகாம்பரம் சின்னத்தங்கம் அம்மையாருக்க மகனாக பிறந்தார்
- மட்டுவில் தம்பிப்பிள்ளையின் உதவியால் நாவலர் காவிய பாடசாலையில் கற்கும் வாய்ப்பு கிடைத்தது
- 1926 திருகோணமலை இந்துக்கல்லூரி ஆசிரியர்
- 1934புனித அகஸ்தீனார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்
- மண்டூர்ப்பதிகம்,பகவத் கீதைவெண்பா,பக்தியோகம்,ஞானயோகம் ஆகியவற்றை எழுதினார்
- கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரப்பதிகம்,சித்தாண்டிப்பதிகம் ,மாமாங்கப்பதிகம்,காளிகாமடு கற்பக வினாயகர் ஊஞ்சல் முதலிய பிரபந்தங்களைப் பாடினார்
- இலக்கிய ரசனை மிக்க எழுத்துப்பணி
- இலங்கை அரசின் பாடநூற் பரசுரச்சபை, இந்து சமய வகார ஆலோசனைச்சபை,இலங்கை சாகித்தியமண்டலம் உறுப்பினராகச் செயற்பட்டார்

**பேராசிரியர் சு வித்தியானந்தன் (08.05.1924  22.01.1989)**

- யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பிறப்பு
- சுப்பிரமணியம் முத்தம்மா பெற்றோர்
- ஆய்வாளர், தமிழறிஞர்,கல்வியியலாளர்,பேராசிரியர்,தமிழ்த்துறைத் தலைவர்,யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர்.
- இவரது நூல்கள்  தமிழர் சால்பு ,இலக்கியத்தென்றல்,கலையும் பண்பும்,தமிழியல் சிந்தனைகள்,மன்னார் நாட்டுப் பாடல்கள்,மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள்
- 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணதில் முன்னின்று நடத்தியவர்
- நாட்டார் இலகியம்,நாட்டப்பறக் கலைகளை தேடித் தொகுத்தவர்
- நாட்டுக் கூத்தை நவீனமயப் படுத்தினார்
- கர்ணன் போர்,இராவணேசன்,வாலிவதை தயாரித்து மேடை ஏற்றினார்
- விரிவுரைகள்,ஆய்வுகள் மூலம் தமிழ்ப் பண்பாட்டை பொதுமைக் படுத்தினார்
- முஸ்லீம் தமிழ் இலக்கியம்,கிறிஸ்தவ இலக்கியம் தொடர்பான செயற்பாடுகள் அவரது நடுநிலைத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

1 பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு எழுதுக

அழகன் எனும் கல்லூரி அதிபர் மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

**கல்லூரி அதிபர் அழகன் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்**

2 பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக் காட்டி ,வழுவற்ற வகையில் வாக்கியத்தை திருத்தி எழுதுக.

அறிவு,ஒழுக்கம்,பண்பு உள்ள பல பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**அறிவு,ஒழுக்கம்,பண்பு உள்ள பெண்கள் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்**

3 பின்வரும் வாக்கியத்தில் உள்ள விடயங்கள் யாவும் ஒரே வாக்கிய அமைப்பில் வரத்தக்க வகையில் எழுதுக.

இராவணன் சிறந்த சிவ பக்தனாக விளங்கினான்.மண்டோதரியும் சிறந்த சிவ பக்தையாக விளங்கினாள்.இவர்களின் வழித்தோன்றல்களும் சிவபக்தி கொண்டு சிவநெறியை வளர்த்தெடுத்தனர்.

**இராவணனும் மண்டோதரியும் அவர்களின் வழித்தோன்றல்களும் சிவபக்தி கொண்டு சிவநெறியை வளர்த்தெடுத்தனர்**

**4 பின்வரும் வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

கிருஸ்ணர் போரில் கீதோபதேசத்தை அருளினார்.

**கிருஸ்ணரால் போரில் கீதோபதேசம் அருளப்பட்டது.**

**கீதோபதேசம் போரில் கிருஸ்ணரால் அருளப்பட்டது.**

5 பின்வரும் சொற்களின் எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக

**திரள்மீடிறன் வரைபு - திரண் மீடிறன் வரைபு**

**புண்ணாக்கு - பிண்ணாக்கு**

- (ஆ) பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்று பற்றி எழுதுக.
- பெயரெச்சம்
- **செய்து,செய்கின்ற ,செய்யும் எனும் அமைப்பில் வரும் எச்ச வினைகள் பெயரெச்சம் எனப்படும்**
- **செய்த வேலை செய்கின்ற வேலை,செய்யும் வேலை**
- **முக்காலங்களையும் உணர்த்தும்**
- **இறந்தகாலம், நிகழ்காலம் - இடைநிலைகளால் காலம் உணர்த்தும்**
- **செய் + த் + அ செய் + கிறு + அ**
- **எதிர்காலம் - விகுதியால் காலம் உணர்த்தும் செய் + உம்**
- **எதிர்மறைப் பெயரெச்சம்**
- **செய்யாத செய் + ஆத் + அ**

# வினையாலணையும் பெயர்

- வினையடியாகப் பிறந்து வினை,காலம்,வினை புரியும் கர்த்தா உணர்த்தும் பெயர்

  வந்தவன் வருதல் இறந்த காலம்

- வேற்றுமை உருபு ஏற்கும்

  வந்தான் + ஐ - வந்தானை

- பழந்தமிழில் வினை முற்றுக்களே வேற்றுமை உருபு ஏற்று வினையாலணையும் பெயராகின

  வந்தேன் + ஐ - வந்தேனை

- தற்காலத்தில் பின்வரும் அமைப்பு உடையன
- வினையடி + காலஇடைநிலை + படர்க்கை இடப்பெயர்

  வா + ந்த் + அவன் - வந்தவன்

- எதிர்மறை வினையாலணையும் பெயர்

  வினையடி + எதிர்மறை இடைநிலை + படர்க்கை இடப்பெயர்

  செய் + ஆத் + அவன் செய்யாதவன்

# வியங்கோள் வினை

- வினையடியுடன் க விகுதி பெற்று வரும் வினைகள் வியங்கோள் வினைஎனப்படும்
- வாழ்த்துதல்,வேண்டுதல்,வைதல்,விதித்தல் ஆகிய பொருள்களில் இவ்வினை பயன்படுகிறது

  வாழ்க,பெறுக,ஒழிக,எழுதுக
- பழந்தமிழில் இய,இயர் ஆகிய விகுதிகளும் வியங்கோள் வினை விகுதிகளாக பயன்பட்டன.
- வாழிய வாழியர்
- தற்காலத் தமிழில் அட்டும் என்பத பயன்படுகிறது
- வாழட்டும் பொழியட்டும்
- அட்டும் வேண்டுதல் பொருளில் வருவதில்லை
- வியங்கோள் வினை முன்னிலையிலும் படர்க்கையிலும் வருகின்றன

# நன்றி